

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் பாரதிதாசன் மணிமண்டபத்தின் கல்வெட்டை திரைப்பட இயக்குனர் பாரதிராஜா திறந்து வைத்தபோது எடுத்த படம். அருகில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முத்துக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கலை விழா:

# மணிமண்டபத்தை, இயக்குனர் பாரதிராஜா திறந்து வைத்தார்

திருச்சி, அக்.24–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த கலை விழாவில் பாரதிதாசன் மணிமண்டபத்தை இயக்குனர் பாரதிராஜா திறந்து வைத்தார்.

**கலைவிழா**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழக 'கலைத் திருவிழா– 2016' கடந்த 21–ந்தேதி தொடங்கியது. அன்றைய தினம் மாணவ, மாணவிகளின் ஊர்வலம் நடந்தது.

விழாவில் குழு பாட்டுப் போட்டி, கவிதை போட்டி, பேச்சுப்போட்டி, கரகாட்டம், கார்ட்டூன் வரையும் போட்டி, கிராமிய நடனம், மேற்கத்திய நடனம், மிமிக்ரி உள்பட 30 வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பாரதிதாசன் பல்கலைக்கழக எல்லைக்கு உட்பட்ட அனைத்து கல்லூரிகளில் இருந்தும் சுமார் 1000 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

**இயக்குனர் பாரதிராஜா**

கலைவிழாவின் நிறைவு



கலைவிழா நிறைவு நாள் நிகழ்ச்சிகள் நடந்த அரங்கில் மயங்கி விழுந்த மாணவிகளுக்கு முதலுதவி அளிக்கப்பட்டபோது எடுத்த படம்.

நாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தன. விழாவுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.எம்.முத்துக்குமார் தலைமை தாங்கினார். மகளிரியல் துறை பேராசிரியை முருகேஸ்வரி வரவேற்று பேசினார். விழாவில் திரைப்பட இயக்குனர் பாரதிராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை நடத்தி அதிக மதிப்பெண் பெற்ற கல்லூரி அணிகளுக்கு விருது மற்றும் சுழற்கோப்பையை வழங்கினார். இதில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை காவேரி மகளிர் கல்லூரி தட்டிச்சென்றது.

திரைப்பட பின்னணி பாடகர்கள் பிரபாகரன், மகாலிங்கம் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கினார். முன்னதாக பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டு உள்ள பாவேந்தர் பாரதிதாசன் மணிமண்டபம், கல்வெட்டை இயக்குனர்